18.02.2026

S.C.No. 21/2024

D. W. 1 Tr. திரு. சந்திரமௌலி

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி :-**</u>

சம்மனில் கூறப்பட்டுள்ள 6381916024 என்ற மொபைல் எண்ணின் சந்தாதாரர் அவரின் தந்தையின் பெயர், முகவரி குறித்தான தகவல்களை கொண்டு வந்துள்ளேன். சந்தாதாரரின் பெயர் திரு. ஆனந்த், தந்தையின் பெயர் திரு. டேவிட், சந்ததாரின் முகவரி நம்பர் 4/71, புரவசசேரி, திருப்பதிசாரம், தேரேகால்புதூர், தோவாளை, கன்னியாகுமரி 629901.

சம்மனில் கூறப்பட்டுள்ள மொபைல் எண்கள். 8883387630 மற்றும் 9488624709 ஆகியவற்றின் சந்தாதாரர் பெயர், அவர்களுடைய தந்தை பெயர், முகவரி மற்றும் அந்த மொபைல் போன்கள் 22.08.2023 அன்று காலை 6.00 மணி முதல் 28.08.2023 இரவு 10.00 மணி வரை அவற்றின் சிம் லொக்கேசன், CDR, Tower Location மற்றும் Call Details சம்மனில் கோரப்பட்டிருந்தது.

மொபைல் எண். 8883387630 சந்தாதாரர் பெயர் திரு. கே. மனோஜ், தந்தை பெயர் திரு. குமார், அவருடைய முகவரி 104/77, காமாட்சி அம்மன் கோவில் தெரு, கிருஷ்ணன்கோவில், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி 629 001. அந்த எண்ணின் சிம் லோக்கேசன், CDR, Tower Location ஆகியவை எங்களிடம் இல்லை,

DOT விதிமுறைகளின் படி அவை இரண்டு வருடங்களுக்குதான் எங்களால் எடுக்க முடியும். எனக்கு அக்டோபர் 2025 ல்தான் இந்த விவரங்களை கேட்டு சம்மன் வந்தது. அதனால் இந்த விவரங்களை எங்களால் எடுக்க முடியவில்லை.

மொபைல் எண். 9488624709 எங்களுடைய வாடிக்கையாளர் கிடையாது. இந்த எண்ணின் எந்த ஒரு விவரமும் எங்களிடம் கிடையாது. இந்த எண் எந்த மொபைல் ஆப்ரேட்டரின் சந்தாதாரர் என தற்போது எங்களால் சொல்ல முடியாது. ஒவ்வொரு ஆப்ரேட்டரிடமும் விசாரித்துதான் அது எந்த ஆப்ரேட்டரின் சந்தாதாரர் என தெரிந்து கொள்ள முடியும். அவர்களிடமும் சந்தாதாரின் பெயர், தந்தையின் பெயர், முகவரி போன்றவை மட்டும்தான் தற்போது கிடைக்க வாய்ப்புண்டு. மற்ற விவரங்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் அவர்களுக்கும் கிடைக்காது.

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்):-**

குறுக்கு விசாரணை இல்லை.